Before the Court of Chief Judicial Magistrate - cum Special Judge, Kanyakumari District.

FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 173 BNSS)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8348003

1. District : Kanyakumari PS: VDAC Year: 2025 FIR No.: 03/2025 Date: 04.05.2025
மாவட்டம் காவல்நிலையம் Kanyakumari ஆண்டு மு.த.அ. எண் நாள்

2. (i) Act சட்டம்: Prevention of Corruption Act 1988 (as amended in 2018) Sections பிரிவுகள்: 7
(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : Date from : 02.05.2025 Date to : 14.30hrs.
குற்ற நிகழ்வு நாள் நாள் முதல் நாள் வரை
Time Period : Time from : Time to :
நேர அளவு நேரம் முதல் நேரம் வரை
(b) Information Received at PS. Date : 04.05.2025 Time : 17.00hrs
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் நேரம்
(c) General Diary Reference : Entry No(s) Time :
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் நேரம்

4. Type of Information : Written/ Oral / Electronic form : Typed Petition
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக / மின்னணு வடிவம்

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: பொதுப்பணித்துறை அலுவலகம், செங்கோட்டை, 30 K.M. வடமேற்கு.
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்
Beat Number : (b) Address :
முறைக் காவல் எண் முகவரி

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : R. பாஸ்கர் (b) Father's/ Husband's Name : ராமகிருஷ்ணன்
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் தந்தை / கணவர் பெயர்
(c) Date / Year of Birth : (d) Nationality : (e) Passport No. :
நாள் / பிறந்த ஆண்டு நாட்டினம் வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : Place of Issue :
வழங்கப்பட்ட நாள் வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : (g) Address : 16-33-4, அருவாக்கரை, ஆற்றூர் (PO), கன்னியாகுமரி மாவட்டம்
தொழில் முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

திரு. ஜெஸ்புன், அலுவலக பணியாளர், பொதுப்பணித்துறை அலுவலகம், செங்கோட்டை,

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

- இல்லை -

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Separate Sheet attached

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed T.I. O.Rமா... Rank கோவை.மே... to take up the investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நட்வடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது /-பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

R. Brith
4/5/2025

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

4/5/2025
Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும் 04-5-2025
19.50hrs.

Name: பெயர் C. சிவசங்கரி,
Rank: நிலை காவல் ஆய்வாளர்,
மாவட்ட குற்றப்பிரிவு தலைமையிடம்
கண்காணிப்பாளர் அலுவலகம்,
கோயம்புத்தூர் மாவட்டம்.

Attachment to column No-12 of FIR in Kanyakumari Vigilance and Anti-Corruption Cr.No.03/2025

பணிந்து சமர்பிக்கப்படுகிறது:- இன்று 04.05.2025 ஆம் தேதி 17.00 மணிக்கு ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை கன்னியாகுமரி பிரிவு காவல் ஆய்வாளர் C.சிவசங்கரி ஆகிய நான் நிலையத்தில் பணியிலிருந்தபோது கன்னியாகுமரி மாவட்டம் ஆற்றூர் அஞ்சல் அருவிக்கரை கதவு எண் 16-33-4 என்ற முகவரியில் வசித்து வரும் ராமகிருஷ்ணன் மகன் திரு.பிரைட் என்பவர் என்முன் ஆஜராகி அளித்த எழுத்து பூர்வமான புகார் மனுவினை பெற்று மேற்படி புகார்தாரர் மற்றும் புகாரில் குறிப்பிடப்பட்டிருந்த எதிரியின் முன்நடத்தைகள் குறித்து எனது ரகசிய தொடர்பாளர்களிடம் விசாரித்து தெரிந்து கொண்டு மேற்படி புகார் மீது சட்டப்படியான நடவடிக்கை எடுக்க ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை தென்சரக காவல் கண்காணிப்பாளர் அவர்களிடம் அலைபேசி மூலமாக தகவல் தெரிவித்து வாய்மொழி உத்தரவு பெற்று ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை கன்னியாகுமரி பிரிவு குற்ற எண் 03/2025 u/s 7 of Prevention of Corruption Act 1988 as amended in 2018 ஆக இன்று 04.05.2025-ம் தேதி 19.00 மணிக்கு வழக்கு பதிவு செய்தேன் மேற்படி புகார் மனுவின் விவரம் பின்வருமாறு. அனுப்புநர் R.பிரைட் வயது 52, த/பெ.ராமகிருஷ்ணன், 16-33-4 அருவிக்கரை, ஆற்றூர் அஞ்சல், கன்னியாகுமரி மாவட்டம். பெறுநர் காவல் ஆய்வாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை, கன்னியாகுமரி பிரிவு, நாகர்கோவில். ஐயா/அம்மா, நான் கன்னியாகுமரி மாவட்டம் அருவிக்கரை என்னும் ஊரில் குடும்பத்துடன் வசித்து வருகிறேன். நான் சொந்தமாக J.C.B மற்றும் கிட்டாச்சி ஆகிய இயந்திரங்கள் வைத்து தொழில் செய்து வருகிறேன். கன்னியாகுமரி மாவட்டம் திருவட்டார் வட்டம் அருவிக்கரை கிராமம், கோதயிங்கட்டைகால் விளை, கதவு எண்.5-16, என்ற முகவரியில் வசிக்கும் திரு.தங்கையன் மகன் திரு.த.ராமையன் என்பவர் திருவட்டார் வட்டம் அருவிக்கரை கிராமம் புல எண்.172/4B1, 172/5A, 174/2-களில் உள்ள அவரது விளைநிலங்களுக்கு விவசாய பயன்பாட்டிற்காக திருவட்டார் வட்டம் அருவிக்கரை கிராமம் புல எண்.88-ல் அமைந்துள்ள பெருங்குளத்திலிருந்து வண்டல் மண்/களிமண் எடுக்க திருவட்டார் வட்டாட்சியர் அவர்களது செயல்முறை ஆணை எண்.TN/12020250410124/ dt.11.04.2025-ன்படி அனுமதி பெற்றதாகவும், அதன்படி அவரது விளைநிலங்களுக்கு வண்டல் மண்/களிமண் எடுத்து கொண்டு செல்ல என்னிடம் கேட்டுக்கொண்டார். அதன்படி வண்டல் மண்/களிமண் எடுக்க நடை சீட்டு பெறுவதற்காக நான் 30.04.2025 அன்று செருப்பாலூரில் உள்ள பொதுப்பணித்துறை அலுவலகத்துக்கு சென்று அங்கிருந்த அலுவலரிடம் உதவி பொறியாளரை பார்க்க வேண்டும் என்று கேட்டபோது உதவி பொறியாளர் குழித்துறை அலுவலகத்தில் இருக்கிறார் என்று கூறியதால் நான் உடனே குழித்துறை பொதுப்பணித்துறை அலுவலகத்துக்கு சென்று அங்கிருந்த உதவி பொறியாளர் திரு.ராஜேஷ் என்பவரை பார்த்து மேற்படி விபரங்களை கூறி நடை சீட்டு வழங்கும் படி கேட்டேன். அதற்கு அவர் பெருங்குளத்திலிருந்து வண்டல் மண்/களிமண் எடுப்பதற்கான அனுமதி ராமையன் என்பவர்

பெயரில் உள்ளதால் அவரது பெயருக்கும் எனது பெயருக்கும் ஒரு ஒப்பந்தம் போட்டு செருப்பாலூர் அலுவலகத்தில் பணியாற்றும் ஜஸ்டின் என்பவரிடம் கொடுங்கள் என்று கூறினார். அதனடிப்படையில் நான் மேற்படி பெருங்குளத்திலிருந்து வண்டல் மண்/களிமண் எனது வாகனங்கள் மூலம் எடுத்து செல்ல வண்டி வாடகையாக ஒரு கிலோ மீட்டருக்கு ரூ.50-என்றும் J.C.B மற்றும் கிட்டாச்சி ஒரு நடைக்கு ரூ.300-வீதம் என நானும் திரு.ராமையன் என்பவரும் ஒப்பந்தம் பேசி 02.05.2025-ஆம் தேதி இருவரும் எங்களுக்குள் உடன்படிக்கை செய்து கொண்டோம். அதன்பின் அன்று மதியம் சுமார் 02.30 மணிக்கு நான் செருப்பாலூரிலுள்ள பொதுப்பணித் துறை அலுவலகத்திற்கு சென்று அங்கு பணியிலிருந்த அலுவலக பணியாளார் திரு.ஜஸ்டின் என்பவரை பார்த்து பெருங்குளத்திலிருந்து வண்டல் மண்/களிமண் எடுக்க எங்களுக்குள் ஏற்படுத்திக்கொண்ட ஒப்பந்தத்தை காண்பித்து நடை சீட்டு வழங்கும்படி கேட்டேன். அதற்கு அவர் வழக்கமாக நடை சீட்டு வழங்குவதற்கு உதவி பொறியாளர் ரூ.10,000/- பெற்றுக்கொண்டுதான் நடை சீட்டு வழங்குவார். எனவே உங்களுக்கு நடை சீட்டு வழங்க வேண்டுமானால் உதவி பொறியாளருக்கு கொடுக்க ரூ.10,000/-ம் என்னிடம் தரவேண்டும் எனவும் அதை 05.05.2025 அன்று காலை பெருங்குளத்திலிருந்து வண்டல் மண்/களிமண் எடுக்க வரும்போது கொடுங்கள், அப்போது நடை சீட்டு தர ஏற்பாடு செய்கிறேன் என்று கூறினார். உடனே நான் உதவி பொறியாளரிடம் பேசட்டுமா என்று கேட்டதற்கு அவர் யார் நடை சீட்டு கேட்டாலும் ரூ.10,000/-ம் பெற்றுக்கொண்டு கொடுங்கள் என்று கூறியுள்ளார் என தெரிவித்தார். அதற்கு நான் ராமையன் என்பவருடன் ஒப்பந்தம் போட்டு வண்டல் மண்/களிமண் எடுக்கிறேன் உங்களுக்கு பணம் தந்தால் எனக்கு நஷ்டமாகிவிடும் என்று கூறினேன். அதற்கு அவர் உங்களுக்கு பெருங்குளத்திலிருந்து வண்டல் மண்/களிமண் எடுக்க நடை சீட்டு வழங்க வேண்டுமானால் நீங்கள் என்னிடம் ரூ.10,000/-ம் தந்தால் மட்டுமே பெருங்குளத்திலிருந்து வண்டல் மண்/களிமண் எடுக்க நடை சீட்டு வழங்க ஏற்பாடு செய்வேன் என்று கட்டாயமாக கூறிவிட்டார். அப்போது அவரிடம் சரி என்று சொல்லிவிட்டு வீட்டிற்கு வந்து விட்டேன். வீட்டில் வந்து யோசித்து பார்த்தபோது எனக்கு லஞ்சம் கொடுத்து நடை சீட்டு வாங்க விருப்பம் இல்லாததால் திரு.ஜஸ்டின் லஞ்சமாக கேட்ட ரூ.10,000/-த்தை எனது தொழிலுக்காக வைத்திருந்த பணத்திலிருந்து எடுத்துக்கொண்டு என்னிடம் லஞ்சம் கேட்ட திரு.ஜஸ்டின் என்பவர் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கும்படி கேட்டு ஒரு புகார் மனு தயார் செய்து கொண்டு வந்துள்ளேன். நானும் திரு.ராமையனும் எங்களுக்குள் ஏற்படுத்திக்கொண்ட ஒப்பந்த உடன்படிக்கை அசலினையும் தங்களிடம் இந்த புகார் மனுவுடன் இணைத்து வழங்குகிறேன். இப்படிக்கு R.Bright. 4-5-2025 (R.பிரைட்)

Sir, Received the complaint on 04.05.2025 at 17.00 hrs. The genuineness of the complaint was verified through sources and found to be genuine. The integrity and antecedents of the accused was also verified through sources and found to be bad. Found prima-facie for the allegation of the complainant. Since the registration of Regular case is warranted. The matter

is intimated to the SP/SR, V&AC, Chennai and registered a case in Kanyakumari V&AC Cr.No.03/2025 u/s 7 of PC Act 1988 as amended in 2018 on 04.05.2025 at 19.00 hrs and took up for investigation.sd.4/5/2025 (C.சிவசங்கரி) காவல் ஆய்வாளர், ஊ.த.க.துறை, கன்னியாகுமரி பிரிவு.

இந்த அசல் முதல் தகவலறிக்கையை வாதியின் புகார் மனு மற்றும் ஒப்பந்த உடன்படிக்கையுடன் இணைத்து கனம் முதன்மை குற்றவியல் நடுவர் மற்றும் தனி நீதிபதி கன்னியாகுமரி மாவட்டம் இருப்பு நாகர்கோவில் அவர்களுக்கு அனுப்பியும் இதர நகல்களை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பியும் ஒரு நகலை நான் விசாரணைக்கு எடுத்து கொண்டேன்

4/5/2025

C. சிவசங்கரி,
காவல் ஆய்வாளர்
ஊ.த.க. துறை,
கன்னியாகுமரி பிரிவு.